# BRAMPTON

**Media Release**

உடனடி வெளியீட்டுக்காக

# ஜூலை மாதம் 2 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தில் கட்டணம் வசூலிப்பது மற்றும் பேருந்தின் முன் வாசல் வழியாக ஏறுவது ஆகியவை மீண்டும் அறிமுகம் செய்யப்பட உள்ளன, மற்றும் மருத்துவம்-அல்லாத முகக் கவசங்கள் கட்டாயமாக்கப்படுகின்றன

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 3, 2020) – இன்றைய தினம், ப்ராம்ப்ட்டன் மாநகரை மீண்டும் திறப்பது மற்றும் மீட்சி பெற வைப்பதற்கான திட்டம் ஆகியவற்றின் அங்கமாக, பல எண்ணிக்கையிலான நடவடிக்கைகள் பற்றி மேயர் பேட்ரிக் ப்ரவுன் அவர்களும் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பும் அறிவித்தனர். ஜூலை மாதம் 2 ஆம் தேதி வியாழக்கிழமை துவங்கி, பேருந்தில் கட்டணம் வசூலிப்பது மற்றும் பேருந்தின் முன்வாசல் வழியாக ஏறுவது ஆகியவை மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும். பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் பயணிக்கும்போது முகக் கவசங்களை கட்டாயம் அணிய வேண்டும் என்று, பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பும் ஒன்ட்டேரியோ அரசும் பரிந்துரைத்தபடி, ஜூலை மாதம் 2 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டன் நகர பேருந்துகளில் பயணம் செய்வோரும் அதனை இயக்குபவர்களும் மருத்துவம் அல்லாத முகக் கவசத்தை பேருந்துகளில் மற்றும் பேருந்து முனையங்களில் இருக்கும்போது அணிவது கட்டாயமாகும்.

பேருந்துகளில் பயணம் செய்வோர் மற்றும் அதனை இயக்கும் ஊழியர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்புதான் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரம் ஆகிய இரண்டிலுமே முன்னுரிமை கொண்ட விஷயமாகும்; மேலும் இந்த மாற்றங்கள் இரண்டையும் உறுதி செய்யும் போது அவை நடைமுறைப்படுத்தப்படும்.

**கட்டணம் செலுத்துதல்**

ஜூலை மாதம் 2 ஆம் தேதி முதல் அனைத்து ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்துகளிலும் கட்டணம் செலுத்துவது அவசியமாகும். கட்டணங்கள் குறித்த முழு விவரங்களுக்கு, இங்கே கிளிக் இங்கே க்ளிக் செய்யவும்.

மூத்த குடிமக்களும் அணுகக்கூடிய வகையிலான போக்குவரத்து வசதியை வழங்குவது நகரத்திற்கு ஒரு முன்னுரிமை கொண்ட விஷயமாக உள்ளது; மேலும் கோவிட்-19 இன் தாக்கத்தைக் கருத்தில் கொண்டு, செயல்பாட்டில் இருக்கின்ற அனைத்து மூத்தகுடிமக்கள் அடையாள அட்டைக்கான காலாவதி தேதிகள் காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து டெர்மினல் அலுவலகங்களில் உள்ள வாடிக்கையாளர் கவுண்டர்கள் ஜூலை 2 க்கு முன்பாகவே மீண்டும் திறக்கப்படும். புதிய தகவல்கள் கிடைக்கும்போது அப்போதைக்கப்போதே அவற்றை வழங்குவோம்

உத்தேசிக்கப்பட்ட 2020 கட்டண விகித மாற்றங்கள் அடுத்த அறிவிப்பு வரும் வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

**பேருந்தின் முன் வாசல் வழியாக ஏறுதல்**

ஜூலை மாதம் 2ஆம் தேதி முதல் அனைத்து பயணிகளும் ப்ராம்ப்ட்டன் போக்குவரத்து பேருந்துகளின் முன் வாசல் வழியாக பேருந்துகளில் ஏற அந்நிறுவனம் அனுமதிக்கும். பயணிகள் பின்புற வாசல் வழியாக வெளியேற வேண்டும். ஒருவருக்கொருவர் இரண்டு மீட்டர் (ஆறு அடி) தொலைவில் இருப்பதன் மூலமும், அடிக்கடி கைகளை கழுவுவதன் மூலமும், இருமல் மற்றும் முழங்கையில் தும்முவதன் மூலமும் உடல் ரீதியான சமூக விலகலுக்கான நடவடிக்கைகளை பராமரிக்க வாடிக்கையாளர்களுக்கு நினைவூட்டப்படுகிறது.

**மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள்**

பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் வலுவான பரிந்துரையைத் தொடர்ந்து, பொது போக்குவரத்துப் பேருந்துகளில் பயணிக்கும்போதும், பேருந்து முனையங்களில் இருக்கும்போதும், பயணிகள் மற்றும் பேருந்துகளை இயக்குபவர்கள், மருத்துவம் அல்லாத முகமூடிகளை அணிவது, ஜூலை மாதம் 2ஆம் தேதி முதல் கட்டாயமாகும்.

முகக் கவசங்கள் அணிவது கட்டாயமாக இருக்கும்போது, இரண்டு வயதிற்குட்பட்ட குழந்தைகள், அல்லது குறைபாடுகள் உள்ளவர்கள் அல்லது முகமூடி அணிவதைத் தடுக்கும் வகையிலான பிற மருத்துவ நிலைமைகள் கொண்டவர்கள் முகக் கவசம் அணியத் தேவையில்லை.

மருத்துவம் அல்லாத முகக் கவசத்தை எவ்வாறு சரியாக அணிவது, பொருத்துவது, அகற்றுவது மற்றும் சுத்தம் செய்வது என்பவை உட்பட, மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, பீல் ப்ப்ளிக் ஹெல்த் வலைத்தளம் மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்க வலைத்தளத்தைப் வலைத்தளத்தைப் பார்வையிடவும்

**கோவிட்-19 (COVID-19) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

முகக் கவசம் அணிந்திருந்தாலும் கூட, பேருந்துகள், முனையங்கள் மற்றும் பஸ் நிறுத்தங்களில் தொடர்ந்து உடல் ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிக்குமாறு நகர நிர்வாகம் பயணிகளைக் கேட்டுக்கொள்கிறது. பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற கிருமி

நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் மற்றும் இருமுதல் , தும்முதலின்போது தங்கள் முழங்கைகளில் முகம் புதைத்து இருமவோ தும்மவோ செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

குறிப்பாக உடல் ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பது என்பது சவாலான விஷயம் எனும் இடங்களில், பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் சுகாதாரத்திற்கான வழிகாட்டுதலுடன், அனைவரையும் மருத்துவம் அல்லாத முகக் கவசத்தை அணிய ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் ஊக்குவிக்கிறது. ஆபத்துக்களை தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாக செயல்படுகிறது. வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19 ஐப் பார்வையிடவும், www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது சேவை புதுப்பிப்புகளுக்காக ட்விட்டரில் @bramptontransit ஐப் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொடர்பு மையத்தை 906.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"கோவிட்-19 தொற்று பரவல் சமயத்தில் நம்மையும் ஒருவருக்கொருவரையும் பாதுகாப்பாக வைத்திருக்க நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். நீங்கள் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து பேருந்தில் பயணிப்பவர் என்றால், பேருந்துகள் மற்றும் முனையங்களில் மருத்தும் அல்லாத முகக் கவசத்தைப் பெற்று அணியுமாறு உங்களை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்; மேலும், அனைவரின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்காக, மருத்துவம் அல்லாத உங்கள் முகக் கவசத்தை அணிவது, பொருத்துவது, அகற்றுவது மற்றும் தூய்மைப்படுத்துவது எப்படி என்பதற்கான பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பு மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும்."

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் ந்கரம்*

கோவிட்-19 தொற்று பரவல் சமயத்தில் குடியிருப்புவாசிகளை இடம் விட்டு இடம் செல்லச் செய்வது என்பது, எங்கள் நகர சபைக்கு முன்னுரிமை கொண்ட விஷயமாகும். நமது நகரத்தை மீண்டும் திறப்பதற்கு முக்கியமான நடவடிக்கைகளை எடுக்கும்வேளையில், ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து ஊழியர்கள் மற்றும் பயணிகளுக்கான, ஒரு பாதுகாப்பான விருப்பமாக இருப்பதை நாங்கள் உறுதிசெய்து வருகிறோம்; இந்த கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கைகள் இவற்றை உறுதிசெய்கின்றன. "

- *ரொவேனா சாண்ட்டோஸ், பிராந்திய கவுன்சிலர் வார்டுகள் 1 & 5; தலைமைப் பொறுப்பு, சமுதாய சேவைகள், ப்ராம்ப்ட்டன் நகரம்*

"நமது சமூகத்திற்கு ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான போக்குவரத்து சேவையை வழங்க ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் அர்ப்பணிப்பு கொண்டுள்ளது. பயணக் கட்டணங்கள் விதிப்பது மற்றும் பேருந்தின் முன் வாசல் வழியாக ஏறுவது ஆகியவற்றை மீண்டும் அறிமுகப்படுத்த தேவையான

அனைத்து நடவடிக்கைகளையும் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகம் எடுத்து வருகிறது; மேலும் பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கத்தின் வழிகாட்டுதலுடன் ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான முறையில் மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் அணிவது கட்டாயம் என்பதையும் நடைமுறைப்படுத்துகிறது. ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது**. நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca